# அண்ணாவின் அறிவுரைக



# அண்ணாவின் அறிவுரைகள்

தொகுத்து வெளியிட்டோர் :

**ப. ச. விசுவநாதன்** M. C.

செயலாளர்,

நகர திராவிட முன்னேற்றக் கழகம், ஈரோடு.

(கோவை மாவட்டம்)

தமிழன் அச்சகம், ஈரோடு.

# முதலமைச்சர்.

ஈரோடு நகர திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர் நண்பர் ப. ச. விசுவநாதன் "அண்ணாவின் அறிவுரைகள்" என்ற ஒரு சிறு நூலினைத் தொகுத்து, பேரறிஞர் அண்ணா அவர்களின் 65-வது பிறந்தநாள் விழாவின்போது தமிழ் மக்களுக்கு இலவசமாக வழங்கிட ஏற்பாடு செய்துள்ளார்.

போற்றிப் பாராட்டத் தகுந்த நல்ல முயற்சி இது. அண்ணா அவர்கள் மாநில சுயாட்சிபற்றிக் கூறியுள்ள அருமையான விளக்கங்கள் இந்த நூலில் முதலிடம் பெறுகின்றன. உரிய நேரத்தில் வெளிவந்துள்ள உயர்ந்த கருத்துக்கள் அவை.

நண்பர் விசுவநாதன் மேற்கொண்டுள்ள நல்ல முயற்சி வெற்றிபெற விழைகின்றேன்.

சென்னை
10—9—73

(ஒப்பம்) **மு. கருணாநிதி.**

# எண்ணம்

செப்டம்பர் 15–தமிழ்த்தாயின் தலைமகன், தமிழகத்தின் தனிப்பெருந் தலைவர், நமது இதய தெய்வம் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள், தமிழர்களின் உள்ளங்களிலும், இல்லங்களிலும் அண்ணா என்றென்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார். அண்ணாவின் கனவுகள் நனவாகி வருகின்றன.

கிறித்துவர்களுக்கு பைபிள் — முஸ்லிம்களுக்கு குரான்– தமிழர்களுக்கு "அண்ணாவின் அறிவுரைகள்"

அண்ணாவின் மறைவிற்குப்பின் அவரது கருத்துக்களைத் தொகுத்து சிறுசிறு நூலாக வெளியிட்டு மக்களுக்கு இலவசமாக வழங்க வேண்டுமென, மறைந்துவிட்ட எனது உடன் பிறவா அண்ணனும், ஈரோடு நகர தி. மு. கழக முன்னாள் செயலாளருமான திரு. சி. முத்துசாமி அவர்களும் நானும் பலமுறை எண்ணியதுண்டு. அந்த எண்ணங்கள் செயல் வடிவம் பெறும்போது அந்த அன்பு உள்ளம் இயற்கையோடு ஐக்கியமாகிவிட்டது அந்த அன்புள்ளம் இருந்திருக்குமேயானால் இந்நூல் இன்னும் பெரிய அளவிலே வெளி வந்திருக்கும்.

எத்தனையோ அலுவல்களுக்கிடையேயும் இந்நூலுக்கு அழகிய அணிந்துரை வழங்கி எனக்கு ஊக்கமும், ஆக்கமும் அளித்த கழகத் தலைவர்–தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்கு எனது நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உரிய காலத்தில் நல்லமுறையில் நூலை அச்சிட்டுத்தந்த தமிழன் அச்சகத்தார்க்கும், விளம்பரங்கள் கொடுத்துதவிய பெரியோர்களுக்கும், இந்நூல் வெளியிட உதவியாக இருந்த கழகத் தோழர்களுக்கும், நண்பர்களுக்கும் குறிப்பாக நண்பர் ஈரோடு ப. கதிரவன் அவர்களுக்கும் நன்றி

அண்ணாவின் இலட்சியமான மாநில சுயாட்சிபெற டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையின்கீழ் ஒன்று திரண்டு பணிபுரிய அண்ணாவின் 65-ம் ஆண்டு பிறந்தநாளிலே சூளுரை ஏற்போம்.

அன்பன்,

ஈரோடு,
15—9—73

**ப. ச. விசுவநாதன்.**

# அண்ணாவின் அறிவுரைகள்

## விழா

மாலையின் மாண்பு மணத்தில்!
விளக்கின் பயன் ஒளியில்!
விழாக்களின் பலன் நமது செயலிலே
இழைத்திடும் மாண்பிலே இருக்கிறது.

### ஏன் வேண்டும் மாநில சுயாட்சி?

மாநில அரசு நோய்தீர்க்கும் டாக்டரின் நிலையில் அல்லாமல் கம்பவுண்டரின் நிலையிலேயே உள்ளது. மத்திய சர்க்காரோ முதல் வகுப்பு டாக்டரின் நிலையில் உள்ளது.

உற்பத்தியைப் பெருக்கும் காரியத்தில் ஒரு மாநில சர்க்கார் ஈடுபடுகிறதென்றால் ஏற்படும் கஷ்டத்தை மத்திய சர்க்கார் ஏற்றுக்கொள்ளவேண்டும். விலை ஏற்றத்திற்கு முழுப்பொறுப்பை ஏற்கவேண்டியது மத்திய சர்க்கார்தான். என்ன காரணம்? பணவீக்கம் ஏற்படவும் அதனால் விலைகள் உயரவும் காரணமாக இருப்பது மத்திய சர்க்கார்தான்.

தாய் பத்தியமிருந்து குழந்தைக்குப் பால் கொடுப்பது போல மத்திய சர்க்காரும், தாய்மை நிலையிலிருந்து மாநில அரசுகளுக்குத் துணை புரியவேண்டும்.

தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் எந்தப் பொருளையும் எந்த வெளிநாட்டிற்கும் விற்பது—தேவையான பொருளைத் தருவித்துக்கொள்வதுபோன்ற உரிமைகளை யெல்லாம் மத்திய அரசு எங்களுக்கு விட்டுவிடுமானால், அதற்கான உரிமை தருமானால் எதற்கும் நாங்கள் மத்திய அரசாங்கத்தை எதிர்பார்க்கமாட்டோம்.

வெங்காயம் முதற்கொண்டு கைத்தறித் துணிகள் வரை எல்லாப் பொருள்களையும் ஏற்றுமதி செய்யும் அதிகாரம் மத்திய அரசாங்கத்திடம்தான் இருக்கிறது. வெளிநாடுகளிலிருந்து குண்டூசியை வரவழைத்துக் கொள்வதற்கான அதிகாரமும் மத்திய சர்க்காரிடம்தான் இருக்கிறது. எல்லாவற்றிலும் மத்திய அரசாங்கம்தான் குறுக்கிடுகிறது.

பிரச்சினைகளில் விட்டுவிடுவதும் சங்கடமான பிரச்சனை களில் தலையிடுவதும் நியாயமல்ல.

பக்தவத்சலம் ரூபாய்க்கு 3 படி கேட்டு ஊர்வலம் நடத்து வோம் என்றார், அதற்கு நான் பதிலளிக்கும் வகையில் மத்திய அரசிடம் 30 கோடி கேட்டுப் பதில் ஊர்வலம் நடத்துவேன் என்று சொன்னேன்.

ஒருவருடைய கையை நீட்டச் சொல்லி அதில் ஒரு பிடி அரிசியோ, சோற்றையோ போடும்போது பின்னலிருந்து ஒருவர் காலை இழுத்துவிட்டால் அந்த ஒரு பிடி அரிசியோ சாதமோ அவரது கையிலா போய்விழும்? உற்பத்தியைப் பெருக்கு என்று சொல்லும் மத்திய அரசாங்கம் உரவிலையை உயர்த்தியுள்ளது.

உரவிலையைக் குறைக்கச் சொல்லி நாங்கள் கேட்ப தோடு மட்டுமல்லாமல் தனிப்பட்ட நிறுவனங்களும் குரல் எழுப்பவேண்டும். உர விலையை உயர்த்தினால் உணவு உற்பத்தி பாதிக்கும். ஆகவே இது அக்ரமமானது என் பதை மத்திய அரசு உணரச்செய்ய மக்களெல்லாம் ஒத்து ழைக்கவேண்டும்.

விலைவாசியை இவன் நோக்கத்திற்குக் குறைத்துவிட்டு இவன் டில்லிக்குப் போகிறானே; இது நியாயமா? ஆகுமா? அடுக்குமா? என்று கூறுகிறார்கள்.

குழந்தை பாலுக்கழுதால் தாயிடத்தில் போகுமா? அடுத்த வீட்டுக்காரியிடம் போகுமா?

உன்னால் உதவி செய்ய முடியவில்லை என்றால் வெளி நாடுகளிலிருந்து வாங்குகின்ற உரிமையை எங்களிடம் கொடுத்துவிடு. முடிந்தால் நாங்கள் வாங்கிக்கொள்கிறோம். அப்பொழுது முடியாமல் உன்னிடத்தில் ஓரணாவிற்காக வந்தாலும், ஏன் வந்தாய் என்று திருப்பிக்கேள், அதுமுறை; நியாயமுங்கூட. அதைப் பேசாமல் இப்படி எதையோ கேட்பது அர்த்தமல்ல.

மாநிலம் என்ற குழந்தையை அந்தந்த மாநில அமைச் சர்களே காப்பாற்றிக்கொள்ளட்டும் என்று கூறுகிறார்கள். அதன்படியே வைத்துக்கொண்டால் என் குழந்தைக்கு நான் என் சொந்த முயற்சியில் ஈடுபடும்போது நீ தடையாகவோ— பங்குக்கோ வரக்கூடாது.

## கோதுமையும், அரிசியும்!

இந்தியா முழுவதற்கும் வெளிநாடுகளில் கோதுமையை வாங்கி—அதிலும் அதிக விலைக்கு வாங்கிக் குறைத்து விற்கிறார்கள். அதுவும் உத்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் ஆகிய கோதுமை சாப்பிடும் மாநிலங்களுக்குத் தான் அதைக் கொடுக்கிறார்கள். இதனால் ஏற்படுகின்ற நட்டத்தை டில்லி சர்க்கார்தான் ஏற்றுக்கொள்கிறது. இந்த நட்டம் மட்டும் 180-கோடி ரூபாய் என்று கணக்கிடப்படுகிறது.

நாமும் கோதுமை சாப்பிடுபவர்களாயிருந்தால் இந்த உதவி கிடைத்திருக்கும். கோதுமை சாப்பிடுகின்ற மாநிலங்களுக்கு உதவி செய்யும் டில்லி சர்க்கார் அரிசி சாப்பிடுகின்ற நமக்கு ஏன் செய்யக்கூடாது?

8-கோடி ரூபாய் நட்டத்தில் ஒரு பகுதியாவது கொடுங்கள் என்றேன். முடியாது என்று சொல்லிவிட்டனர் இதைக் கேட்டதும் பஞ்சபாண்டவர் கதைதான் எனக்கு ஞாபகத்திற்கு வந்தது.

## அதிகாரப் பங்கீடு

சட்டம் திருத்தப்படவேண்டுமென்று வற்புறுத்துவதற்குக் காரணமே அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான்!

அன்னிய ஆக்கிரமிப்பிலிருந்து நாட்டை பாதுகாப்பதற்கும்—உள்நாட்டிலே ஒற்றுமை உண்டாக்குவதற்குமான அதிகாரங்களை மட்டும் மத்திய அரசு தன் பொறுப்பில் வைத்திருந்தால் போதும். மாநில அரசுகளின் வரவு விவகாரத்தில் மத்திய அரசு தலையிடத் தேவையில்லை

மத்திய அரசிடமிருக்கும் அதிகாரங்கள் எல்லாம் மாநில அரசுகளுக்கு நியாயத்தின் அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படவேண்டும். அப்படி அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட அரசியல் சட்டத்தைத் திருத்தவேண்டும். வரலாற்றைப் புரட்டிப் பார்க்கும்போது பல்வேறு அரசுகள் அதிகாரக் குவிப்பினால்தான் அழிந்தன என்பது புலனாகும்.

குப்தப் பேரரசு, முகலாயப் பேரரசுகளெல்லாம் அதிகாரக் குவியலின் காரணமாகத்தான் சரிந்துபோயின அந்த நிலை நம்முடைய நாட்டிலும் ஏற்பட்டுவிடக் கூடாது என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில்- அக்கறையின் விளைவாக இதைச் சொல்லுகிறேன்.

சேலம் இரும்பாலை, தூத்துக்குடித் துறைமுகம் ஆகிய திட்டங்களுக்காக மத்திய அரசை எதிர்த்து எல்லா அமைச்சர்களும் சிறைசெல்லத் தயாராக இருக்கிறோம். இதை மத்திய அரசுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எதற்கெடுத்தாலும் டெல்லியைக் கேட்கிறார்களே என்று சொல்லுகிறார்கள். டெல்லியைக் கேட்காமல் வேறு யாரைக் கேட்பது? தன்வீட்டுக் கதவைத் தட்டுவானே தவிர எதிர்வீட்டுக் கதவையா தட்டுவான்?

மாமியார் பீரோவைப்பூட்டி, சாவியை முந்தானையில் முடிந்து இருக்கும்போது, விருந்தாளிக்குக் காப்பி கொடுக்க வெள்ளித் தம்ளரை எப்படி எடுக்கமுடியும்? சாவிக்கு மருமகள் மாமியாரைக் கேட்காமல் எதிர்வீட்டு அலமேலுவையா கேட்பாள்? பெட்டிச் சாவியைக் கீழே போட்டு விட்டுத் தேவையானதை எடுத்துக்கொள்ளட்டும்.

டில்லிப் பேரரசு காங்கிரசல்லாத அரசுகளைக் கவிழ்க்க முயற்சி எடுத்தது தவறுதான். அதுபோலவே பதவி மிட்டாய்களுக்காக கட்சி மாறுபவர்களை கூட்டணியில் வைத்துக்கொண்டதும தவறுதான் 24-மணி நேரத்தில் அமைச்சராக இருந்து—பிறகு எதிர்க்கட்சிக்குப்போய்— அதன் பிறகு திரும்புபவர்களை வைத்துக்கொண்டிருந்ததும் தவறுதான்.

கவர்னருக்கு அமைச்சரவையைக் கலைக்கும் அதிகாரம் இப்போது இருப்பதாகக் கூறலாம். ஆனால் அது தேவைதானா—சரிதானா என்பதை சுப்ரீம் கோர்ட்டின் கருத்தைக் கேட்கவேண்டும்.

பொதுவாக இந்த அரசியல் நிகழ்ச்சிகள் காட்டும் பாடம் இந்தியாவில் ஜனநாயகம் ஆட்சியாளரால் கீழ் நிலைக்குத் தள்ளப்படுகிறது என்பதுதான்.

## காந்தீயம்

"காந்தீயம்" என்பது தத்துவமாகிவிட்டபோது அதை ஒரு கட்சியுடன் இணைக்காமலிருந்தால் இன்னும் அதற்கு முழு மதிப்புக் கிடைக்கும். ஆனும், நான் சார்ந்திருக்கிற கட்சியும், அதன் ஆட்சியும் காந்திய வழிப்படி மக்களுக்கு எது எது தேவையோ அவற்றை முடிந்த அளவு நிறைவேற்றுவோம்.

## எங்கே ஒருமைப்பாடு?

எந்த ஒரு காங்கிரசல்லாத அரசாங்கமும் நெடுங்காலம் இயங்குவதை டில்லி அரசு பார்த்துக்கொண்டிருக்கச் சகிக்காது இன்றுள்ள அரசியல் சட்டம் எந்த மாநில மக்கள் அரசையும் கலைக்கும் அதிகாரத்தை டில்லிக்குத் தந்துள்ளது.

மத்திய அரசு தான் நடத்திப்பார்க்க விரும்பும் எத்தகைய மேம்பாடான திட்டமாயினும் தமிழகத்தில் வந்து நடத்தட்டும். வெளி மாநிலங்களில் ஒரு காரியத்தைச் செய்ய 100 ரூபாய் செலவாகுமானல் இங்கே அதே காரியத்தைச் செய்ய 60 ரூபாய்தான் செலவாகும்.

கிருஷ்ணு கோதாவரியைப் பெண்ணுற்றுடன் இணைத்தால் வறண்டுகிடக்கும் தமிழ்நாட்டுப் பகுதிகள் பலமடையும் மேற்கே ஓடி கடலில் விழுந்து வீணுவதாகச் சொல்லப்படும் ஆறுகளின் நீரும் தமிழ்நாட்டிற்குத் திருப்பி விடப்பட்டால் நல்ல பலனையளிக்கும் ஒருமைப்பாடுபற்றிப் பேசும் மத்திய அரசு இதைக் கவனத்தில் வைக்கவேண்டும்.

## உழவே தலை

எந்தத் திட்டமாயினும் விவசாயத்தை பலமுடையதாகச் செய்யக்கூடியதாகவே அமையவேண்டும். இது அனைவராலும் இப்போது ஒப்புக்கொள்ளப்பட்டு விட்டது. இவ்வாறு விவசாயத்தைப் பலப்படுத்துவோமானல் இந்நாட்டுப் பொருளாதாரம் புத்துயிர் பெறும்—புது வலிவு பெறும்.

தமிழ்நாட்டின் இன்றைய விவசாயி புதிய முறைகளைக் கையாண்டு விவசாயத்தில் வளம்காணத் துடிக்கிருன். எந்த முறையானுலும் முதலில் மற்றவர் செய்து பார்க்கட்டும் அப்புறம் நாம் செய்யலாம் என்ற அளவில்தான் அவனது பழமைப் போக்கு உள்ளது.

வேளாண்மைத் துறையை வலிவடையச்செய்வதில் தீவிர கவனம் செலுத்தவேண்டும். தளராது உழைத்து அதை வலிவுள்ளதாக ஆக்கிவிட்டோமானல் நம் தொழில்களுக்குத் தேவையான மூலதனத்துக்கு எவரிடமும் உதவி நாடி நிற்கத் தேவையில்லை வேளாண்மை மக்களே உதவிட முன் வருவார்கள், தொழில் முயற்சிகளில் பங்குதாரர்களாகச் சேர்ந்து ஊக்குவிப்பார்கள். இதற்குத் துணை செய்யும்வகையில் அடுத்த ஐந்தாண்டுகளுக்கு வேளாண்மை மக்கள்மீது வரி எதுவும் விதிக்காது விடவேண்டும் ஏனெனில் கிராமப் புறங்களில் விவசாயிகளின் கைகளில் காசு புழங்கத் துவங்கியுள்ளது. பணத்தின் ஓசை கேட்கத் துவங்கியுள்ளது.

இந்தியப் பொருளாதாரமே விவசாயத்தை அடிப்படையாகவே கொண்டுதான் கட்டப்பட்டிருக்கிறது அப்படிப்பட்ட நம்முடைய நாட்டு அமைச்சர்கள் ஆஸ்திரேலியாவிலிருந்து கோதுமை வருகிறதா என்று கடலை நோக்கிப் பார்த்துக்கொண்டிருக்கும் நிலைமை இருக்கிறது.

இந்தியாவுக்கு ஆகாய விமானம் வேண்டுமென்று கேட்கலாம்; அதிலே நியாயமிருக்கிறது. கப்பல்கள் வேண்டுமென்று கேட்கலாம்; அந்தத் துறையில் இன்னும் நாம் தேர்ச்சி பெறவில்லை என்பதால். ஆனல் சோறுபோடு என்று அன்னியரிடம் கேட்பது?

தஞ்சையில் மூன்று மைல் தூரத்துக்கொரு சத்திரம் இருக்கிறது. காணுமிடமெல்லாம் கோவில்கள் இருக்கின்றன—காதில் விழுவதெல்லாம் மந்திர ஒலியாக விழுகிறது. தெருவுக்குத்தெரு — திருவிழாக் கோலமிருக்கும். இப்படிப்பட்ட வளம்நிறைந்த நாட்டில் சோறு இல்லை.

விவசாயிகளைத் திருப்தியோடு வைத்துக்கொள்ள வேண்டும். உரம்போட்டால் விளையாத நிலம்கூட அவன் உடலிலிருந்து விழும் வியர்வையால் விளையும். ஆத்திரத்திற்குச் சாத்திரமில்லை; பசி வந்திடப் பத்தும் பறந்துபோம் என்று பெரியோர்கள் சொல்லுவார்கள். ஆகவே உழவர்களைப் பசியின்றிச் செய்துவிட்டுப் பாருங்கள், உற்பத்தி பெருகும்.

## மதுவிலக்கு

மதுவிலக்கு, விசைத்தறி ஆகிய இரண்டிலும் இந்திய அரசு நாடுமுழுவதும் ஒரேவிதமான கொள்கையை அமு

லாக்கவேண்டும். எனவே மற்ற மாநிலங்களும் மதுவிலக்கை அமுல் நடத்தச் செய்வதுதான் மத்திய அரசின் கடமை. அண்டை மாநிலங்கள் தளர்த்தினால் இங்கிருப்பவர்களுக்குச் சபலம் ஏற்படுகிறது. இதனால் பிரச்சினைகளும் கிளம்பு கின்றன.

இது நாணயமாக நடப்பவனுக்குத் தண்டனையும், அக்கிர மக்காரனுக்குப் பரிசும் கொடுப்பது போலிருக்கிறது.

இந்த மதுவிலக்குக் கொள்கையையும் கைத்தறிக் கொள்கையையும் கடைப்பிடிப்பதால் தமிழக அரசுக்கு ஏற்படும் கஷ்டத்தை, நஷ்டத்தை ஏற்க மத்திய அரசு முன்வரவேண்டும். மதுவிலக்குக் கொள்கையை இவ்வளவு கஷ்டத்திலும் கடைபிடிப்பதற்காக—காந்தியக் கொள்கை யைக் காப்பாற்றுவதாகவாவது மத்திய அரசு பரிசாக ஒரு தொகையை அளிக்க முன்வரவேண்டும்.

## தமிழகமும், கேரளமும்

கேரளத்து முதலமைச்சரைச் சந்தித்தபோது நான் அவரிடம், "அரிசி கேட்கிறீர்கள் தருகிறோம்; ஆனால் கடலில் போய் வீணாகும் கேரளத்துத் தண்ணீரை எங்களுக்குத் தாருங்கள்" என்று கேட்டுக்கொண்டிருந்தேன்.

கேரளா அமைச்சர் தருகிறேன் என்று கூறியதாகப் பத்திரிகைச் செய்தியொன்றைப் பார்த்தேன்.

அந்தச் செய்தி, செய்தியாளரின் ஆர்வத்தால் வெளி யிட்டதாக இல்லாமல் உண்மையானதாக—ஆதாரப் பூர்வ மாக அமையுமானால் — தண்ணீரைப் பெற்றுக்கொண்டு அரிசியை தருவதற்கான பிரச்சனையில் நான் அக்கறை காட்டுவேன்.

தமிழகத்தில் கேரளத்து மக்கள் லட்சத்திற்குமேல் இருக்கிறார்கள். ஆனால் கேரளத்தில் தமிழர்கள் ஆயிரக் கணக்கில்தான் இருக்கின்றனர். கேரள மக்களுக்கு நாங்கள் இப்போது சோறு போட்டுக்கொண்டிருக்கிறோம் என்று நான் நம்பூதிரி பாட்டிடம் சொன்னேன்.

ஒருவரைக் கெடுத்து இன்னொருவரை வாழவைக்க நான் என்ன அவ்வளவு பைத்தியக்காரனா? யாரையும்

கெடுக்கவேண்டும் என்ற நோக்கம் எனக்கில்லை. ஒருவரின் தேவைக்குப் போக மீதமுள்ளதை மற்றவர்களுக்குத் தந்துதவும் திட்டம்தான் இது.

### உழுபவனுக்கே நிலம் சொந்தம்

பாடுபடுகிற உழவனுக்கு நிலம் சொந்தமானால் அவன் நிமிர்ந்து நடப்பான். அவன் நெஞ்சத்தில் மகிழ்ச்சி ஏற்படும் எனவே பண்படுத்தியபின் ஒப்படைக்கும் இத்திட்டத்தை வகுத்துச் செயலாற்ற விருக்கிறோம் இன்னும் 10 15 ஆண்டுகளில் பி ஏ பட்டதாரி டிராக்டர் ஓட்டுவதையும், எம். ஏ , பட்டதாரி அறுவடை செய்வதையும் பார்க்கலாம்.

நூற்றுக்கு நூறுபேர் படிக்கவேண்டும்—படித்தவர்கள் விவசாயத்தில் ஈடுபட்டால் கிடைக்கின்ற பலன் மிக அதிகமாக இருக்கும். படிப்பறியாத விவசாயி உரம் கேட்டால் அதிகாரிகளிடமிருந்து வருகின்ற பதில் வேறாக இருக்கும். போய் முத்துசாமியை அழைத்துவா என்பார்கள். அதையே ஒரு பி ஏ பட்டதாரி கேட்டால்— கேட்கும் குரல் மட்டுமல்ல —கிடைக்கும் பலனும் வேறாக இருக்கும்.

படித்தவன் உழவேண்டும்–உழுபவன் படிக்கவேண்டும். படிப்பான் அறிவுப் பசியைத் தீர்க்க—உழுவான் உற்பத்தியைப் பெருக்க என்ற நிலை ஏற்பட வேண்டும்.

தமிழக விவசாயத்துக்கு அவசியமான நிதி உதவிகளை மத்திய அரசு அளித்திடுமானால் இன்னும் இரண்டு ஆண்டுகளில் அரிசி உற்பத்தியை உபரியாக்குவதோடு நேர்த்தியான சிலரக அரிசி வகைகளை அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வோம்

### தொழிலாளியின் கடமையும்—உரிமையும்!

பாரதி சொன்னார் தொழிலாளர்கள் பிரம்மாக்கள் என்று பிரம்மாக்கள் என்றால் தெய்வங்களல்ல. உற்பத்தி செய்பவர்கள் உற்பத்தி செய்வதுதான். ஆக்குந் தொழில்தான் பிரம்மாவுக்கு உரியது என்று புராணங்கள் கதை சொல்லும்.

அதைப்போல தொழிலாளர்கள் பிரம்மாக்களாகத்தான் இருக்கவேண்டுமென்று நினைத்தால்—தொழில் இருக்கும்; ஆனால் வளமிருக்காது.

தொழிலாளர் உரிமைகளையும், அவர்கள் நலனையும் எவ்வளவுக்கெவ்வளவு பாதுகாக்கின்றோமோ அவ்வளவு விரிந்த அளவில் தொழில்வளம் பெருகும். நாட்டுடைமை சேதமாகாமல் செயல்படுமானால் தொழிலைப் பெருக்கலாம். தொழிலாளர் தங்கள் வாழ்வு ஒளிவிடும் அளவு உழைக்க வேண்டும்.

அமெரிக்காவிலிருந்தும் ஜப்பானிலிருந்தும் இயந்திரம் தருவிக்கலாம். ஆனால் மனித இயந்திரங்களைத் தருவிக்க முடியாது. அந்த இயந்திரத்தையும் மனித இயந்திரம்தான் செய்கிறது. நூற்றில் ஒரு பங்காவது பாட்டாளி நலனில் அக்கறை காட்டவேண்டும்.

தொழிலாளர் சமூகம் நல்ல பலம் பெற்றால் அவர்கள் ஈடுபட்டுள்ள பணிகளில் மேலும் தெம்போடு உழைப் பார்கள். மனமும் உடலும் மகிழ்ச்சியாக இருந்தால் உற்பத் தியின் அளவு அதிகரிக்கும். செல்வம் வளரும்.

எனவே தொழிலாளர். நலனுக்காக எவ்வளவு செல விட்டாலும் அது சமூகத்துக்கு ஒன்றுக்கு ஒன்பதாகத் திரும்பிவரும். தொழிலாளருக்காகச் செலவிடப்படும் தொகை ஒரு நாளும் நட்டக் கணக்காகி விடுவதில்லை.

உணர்ச்சியில் உந்தப்படுபவன் மனிதன் அந்த மனிதன் ஒரு அருமையான இயந்திரம். அவனுடைய இதயத்தில் வலி அவனது கண்களில் கண்ணீர்—அவனது நெஞ்சத்தில் வலி-அவனது உடலில் வாட்டம் காணப்பட்டால் அந்த மனித யந்திரத்திடமிருந்து முழுப் பயனும் பெறமுடியாது.

**கூட்டுறவே நாட்டுயர்வு!**

கூட்டு—உறவு என்ற இரண்டு சொல் சேர்ந்து கூட்டுறவு என்று பெயர் பெற்றுள்ளது. கூட்டு மட்டும் என்றால் லாபத்துக்குத்தான். உறவு என்று இருப்பதால், அது லாபம் அற்று இருக்கிற உறவாகத்தான் இருக்கவேண்டும்.

ஒரு பல் தேய்ந்து போனாலும் சக்கரத்தின் ஓட்டம் குறைந்துவிடும் ஒழுங்காக ஓடிக்கொண்டு இருக்கிற கடிகாரம் போன்றது கூட்டுறவு இயக்கம். ஒரு ஆணி கழன்று விட்டாலும் மொத்தத்தில் பாழ்பட்டுப் போய்விடும். அதனால் கூட்டுறவு இயக்கத்துக்குத் தொடர்புள்ள மத்திய பாங்கு—

சர்வ் பாங்கு இவைகளுக்குள் கூட்டுறவு எப்போதும் சரியாக இருக்க வேண்டும்.

## சமுதாய ஒழுக்கம்

சமுதாய ஒழுக்கம் காப்பாற்றப்பட வேண்டும். பதுக்கல் என்பது தவறான காரியம். அதை சர்க்காரின் நடவடிக்கையினால் மட்டுமே தீர்த்துவிட முடியுமென்று கருதக்கூடாது. பதுக்கல் சமூக விரோதச் செயல் என்ற எண்ணம் ஒவ்வொருவருக்கும் எழவேண்டும்.

எந்தப் பொருளுக்குப் பற்றுக்குறை ஏற்பட்டு பங்கீட்டு முறை இருக்கிறதோ அந்தப் பொருள்களால் கள்ள வாணிகமும் பதுக்கலும் ஏற்படுகிறது—இதைத் தடுக்கவேண்டும்.

## கைத்தறியாளர் நிலை காணீர்!

நெசவாளர்களுக்குள்ள கஷ்டங்கள் :

(1) நூல் விலை ஏற்றம்
(2) சாயங்களின் விலை ஏற்றம்.
(3) தேவையான முதலீடு தரும் பாங்குகளின் தயக்கம்.
(4) நம்நாட்டுக் கைத்தறியை இறக்குமதி செய்த நாடுகள் கதவைச் சார்த்திவிட்டன.

கோடிக்கணக்கான மக்கள் இந்தத் தொழிலால் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். உண்மையைச் சொன்னால் வதைபட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வெளிநாட்டில் சந்தை தேடிக்கொடுக்கும் பொறுப்பு மத்திய அரசைச் சார்ந்ததாகும்.

விசைத்தறியின் போட்டியால் கைத்தறிக்கு ஏற்படும் கஷ்டத்தை நஷ்டத்தை நாங்கள் மட்டுமல்ல—மத்திய அரசும் தாங்க முன்வரவேண்டும்.

## சாமானியர்களின் சகாப்தம்

சாமானியர்களின் சகாப்தம் இது. இது குறித்து எத்தகையவர்கள் — எத்துணைக் கருத்து வேறுபாடு — மாறுபாடு கொண்டிருந்தாலும், சாமானியர்களின்—ஏழை எளியவர்

களின் எண்ணங்கள் நிறைவேற்றப்பட்டுத் தீரும் நேரம் வந்து விடும் என்பதனை மறந்திடவே முடியாது "ஏழைசொல் அம்பலம் ஏறும் காலம்" என்பதும் சரியே.

சாமானியர்கள், அவர்கள் எத்துணை ஏழ்மையிலும், அறியாமையிலும் உழன்று உருக்குலைந்து காணப்படும், அவர்தம் கருத்தோட்டத்தை மதித்திடல் வேண்டும். அதன்படி நடந்திடவும் வேண்டும் என்பதைத்தான் உங்களுக்குச் சுட்டிக்காட்டிட விரும்புகிறேன். சாமானியர்களின் விருப்பங்களை, எண்ணங்களை, எழுச்சியை எடுத்துக்காட்டிடும் பிரதிநிதியாகவே உங்களிடம் பேசிடவும் விரும்புகின்றேன்.

சமுதாயத்தின் பேரங்கமாக — மிகப்பெரும்பாலோனாக உள்ளான் அந்தச் சாமானியன் — சராசரி மனிதன் சமுதாயத்தின் கீழ்ப்படி நிலையில் உள்ளவன் அவன். ஆனால் அந்தச் சாமானியன்தான் — சராசரி மனிதன்தான் நாட்டுக்கு — நமது நாட்டிற்கு மட்டுமல்ல, உலக சமுதாய முழுமைக்கும் அச்சாணியானவன் — ஆணிவேர் எனப்படுபவன். மனித குலமனைத்திற்கும் முதுகெலும்பானவன் — முக்கிய ஆதாரமே அவன்தான்.

உழைப்பு! ஓயாத உழைப்பு! நாளொன்றுக்குப் பதினைந்து மணிநேரமும் உழைத்திடுபவன். சழனி காடுகளிலேயே பெரிதும் உழைத்திடும் அவனுக்கென்று கையளவு நிலமும் இல்லை; சொந்த நிலமற்ற உழைப்பாளி உழைத்துப் பிழைத்திடுபவன்.

பெரும்பாலும் பசித்திருக்கும் வயிற்றினையே தோழமையாய்ப் பெற்றிருப்பான். அவன்! அவன் மட்டுமல்ல—அவனது குடும்பத்தாரும் அப்படியே.

சாமானியனது வாழ்வினை, சாவு சடுதியில் சூழ்ந்து கொள்ளும்! இளம் வயதில் இறப்பு முதிராத வயதில் வாழ்வின் முடிவு; தேடி வந்துவிடும் அவனை!

## எண்ணப் பேரொலிகள்

சராசரி மனிதனிடம் கிளர்ந்துள்ள எண்ணத் தெளிவின் எழுச்சியின் காரணமாக அதன் தொடர்பாக அநீதியை எதிர்த்து அணிவகுப்புகளும் ஆர்ப்பாட்டங்களும், பேரணி

களும், போராணிகளும் நித்தம்நித்தம் நடைபெற்று வருவதும் தெரிந்ததுதானே. முரண்பட்ட தன்மைகளின் எதிரெதிர்த் தாக்குதல்களால் கலாம்கள் விளைகின்றன. எழுச்சி முழக் கங்கள்; எண்ணப் பேரொலிகள் அழுத்தந் திருத்தமான ஆர்ப்பாட்டப் போர்க்குரல்கள் கேட்டபடிதானே உள்ளன?

நாணயம், நீதி, நேர்மை, தன்னம்பிக்கை தன் முனைப்பு எனப்படும் சீரிய நற்குணங்களைப் பூண்டு ஒழுகினால்தானே இன்பவாழ்வு கிட்டிடும்? தன்னை உணர்ந்து தனக்காகவும் பிறருக்காகவும் பாடுபட்டால்தான் பயன் உண்டு தன்னை மட்டுமல்லாது தனது உற்றார் உறவினர், ஊர்மக்கள் அனை வரின் தேவைகளையும் உணர்ந்து மதித்து நடந்திடும் பாங்கு டன் கூடிய முயற்சி உழைப்பினை மக்கள் அனைவரும், குறிப்பாகச் சாமானியர்கள் அனைவரும் பெற்றால்தான் இச் சீரிய செயல், நடைமுறைக் காட்சியாகிட முடியும்.

## நன்றா இது?

நமதென்று கூறப்படும் மதம், மார்க்கம்; நமக்கென்று வாய்த்துள்ள சமயம, சன்மார்க்கம்; நம்மிடையே உலாவரும் உபதேசங்களும் ஒழுக்க முறைகளும் வாழ்க்கை நெறியி லிருந்து மாறி முன்னைப் பழமைப் பண்பாட்டிலிருந்து வேறு பட்டும் மாறுபட்டும், முரண்பட்டும் சீர்கேடு அடைந் துள்ளனவே. அவையெல்லாம் இன்று வெறும் சம்பிர தாயங்கள்—சடங்குகள் என்றாகி விட்டிருக்கின்றனவே! நன்றா இது?

## பெரியார் இராமசாமி

ஏழை எளியவர்களின் எண்ணத்தின், எழுச்சியின் சின்னமாக, சமுதாயக் கொடுமைதனை அறவே களைந்திடத் துடித்திடும் தூயவர்களின் தூதுவனாக அறிவுப் போர் முரசம் கொட்டிடும் பாசறையின் அறிவுத் தந்தையாக— ஆற்றல் மறவனாக, சிந்தனைச் சிற்பியாகப் பெரியார் இராம சாமி இன்று நம்மிடையே சொலாற்றி வருகிறார் என்பதை உணர்ந்து நடந்திட வேண்டுகிறேன்.

## ஒழியட்டும் சாதி

சாதி பேதங்களைச் சாடுங்கள்—அவை ஜனநாயக மரபு களுக்குச் சற்றேனும் பொருத்தமற்றவை என்பதால்!

மூட நம்பிக்கைகள் அனைத்தையும் மண்மூடிப்போகச் செய்யுங்கள்—அவை விஞ்ஞான யுகத்திற்குச் சிஞ்சிற்றும் ஒவ்வாதன என்பதால்!

ஆணவம், அகங்காரம், அதிகாரச் செல்வாக்கு, செல்வச் செருக்கு ஆகியவை எந்த உருவத்தில் ஆதிக்கம் செலுத்தத் தலைதூக்கினாலும் அந்த ஆதிக்கக் கொடுமையை, அடக்கு முறைப் பிடியினை அடியோடு பூறித் தெறியுங்கள்—சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய சமரச கருத்தோட்ட வாழ்விற்கு, ஆதிக்கவுணர்வு பேரெதிரி என்பதால்!

## உரிமைக்குத் தமிழ்—உறவுக்கு ஆங்கிலம்

தமிழகத்தில், தமிழ் அரசுமொழி! ஆங்கிலம் இந்திய நாட்டின் இணைப்பு மொழி! என்பதே எமது திட்டவட்டமான கருத்து. இதனை தமிழக அரசு மிகவும் தெளிவுபடுத்தி விட்டிருக்கிறது. உரிமைக்குத் தமிழ்—உறவுக்கு ஆங்கிலம் என்பதுதானே இதன் பொருள்?

## மாணவர்கள் சிந்தனைக்கு....!

மொட்டவிழ்ந்த மலராகத்தான் உள்ளீர்கள், மலர்ந்திடும் அறிவுப் பருவத்தினரான நீவிர்.

மொட்டவிழ்ந்த மலர் முழு மலர்ச்சியுற்றுப் பூத்துக் குலுங்கிடல் வேண்டும். பிஞ்சுவிட்டுக் காயாகி, சுவை தந்திடும், கனியாகப் பழுத்திடவும் வேண்டாமா? வேண்டும். சுவையும் பயனும் வேண்டாதார் யார், எவர்?

படித்ததை — படிப்பிக்கப்பட்டதை, தெரிந்ததை — தெரிவிக்கப்பட்டதை, மென்மேலும் ஆய்ந்தோய்ந்து தெளிந்திட வேண்டும் நீங்கள்.

பல்கலைக் கழகங்களுக்கான செலவின் பெரும்பகுதி சர்க்காரின் வருவாய்த்துறை மூலம் பெறப்படும் பெருநிதியிருலிருந்துதானே தரப்படுகின்றன.

அரசின் பெருநிதிக்குப் பொருளினை வாரி வாரி வழங்கிடும் பெரு மக்கள் யார்? எவர்? பெரும்பாலும் உழவர்களும் உழைப்பாளிகளுந்தானே!

சமூகத்தின் பெரும்பாலோரின் வரிப்பணத்தி லிருந்து சமூகத்தின் சிறு அங்கமான சிலருக்குக் கல் லூரிப் படிப்புப் பெறும் வாய்ப்பு தரப்படுகின்றது. பலரின் தியாகத்தால் மிகச்சிலர் சிறப்பு மிகுந்த அறிவுக் கண்பெறுகின்றனர். ஆராய்ச்சித் திறன் மிக்கோரா கின்றனர். மேதைகளாக்கப்படுகின்றனர்! பட்டதாரி களாகின்றனர்!!

பலரது உழைப்பால் விளைந்த செல்வத்தின் பயனைத் துய்த்துப் பட்டதாரிகளாகியுள்ளீர்கள். உங்க ளுக்காகத் தினையளவேனும் ஒவ்வொருவரும் தியாகம் செய்துள்ளனர் என்பதை உணருங்கள் முதலில்!

மக்களுக்கு, சமூகத்தில் மிகப் பெரும்பாலோராக உள்ள சாமானியர்களுக்கு நீங்கள் செலுத்திடப் போகும் நன்றிக் கடன் யாது? எப்படி? உழவர்களும் உழைப்பாளிகளும் செய்திட்ட தியாகத்திற்கு நீங்கள் திருப்பித் தந்திடப் போகும் பண்பு என்ன? அதுதான் தியாக மனப்பாங்கு! ஊருக்கு உழைத்திடும் பண்பு! அதனைப் பெறுவீர்; செயல் படுவீர் இன்றே!

## இளமை—அது இனிமை


இளமைப் பருவம் இருக்கின்றதே அதைப்போன்ற தொரு பக்குவமான பருவம் வேறேதும் இல்லையென்றிட லாம். படிப்பது—படித்தது குறித்து ஆய்ந்தறிந்திடுவது, கேட்பது—கேட்பனவற்றைத் துருவித் துருவிப் பார்த்துத் தெளிந்திடுவது என்பதெல்லாம் இளமைப் பருவத்தில் தான் மெத்தவும், மிடுக்குடன் நடந்திடும்!

அறிவுத்தாகம், சிந்தனைப்பசி! இளைஞரிடந்தானே மிகத் தீவிரம்? பரந்து விரிந்த, கள்ளங்கபடமற்ற திறந்த மனப் போக்கு இளமைப் பருவத்தின் இருப்பிடமாயிற்றே!

வளையும், நெளியும், துவளும்! எப்படியும் அசைத்திட இடங்கொடுத்திடும்—ஆனால் உடைந்திடாது, ரப்பர். அது போல் எக்கருத்திற்கும் ஏற்ப நெகிழ்ந்து கொடுத்திடும் உளப்பாங்கு இளமைக் காலத்தில் மட்டுமே பெரிதும் காணக்கூடியதல்லவா!

# புத்துலகம் நோக்கிப் புறப்படுவோம்!

நாம்
வாழ்ந்திடும்
ஊரும் உலகும்
எப்படியிருத்தல்
வேண்டுமெ
என்றிடின்—
மெய்யது தளர்ந்து
கையது ஏந்திப்
பிச்சை கேட்டு
இரந்திடும் மாந்தர்,
இரக்க மென்ற
ஒரு பொருளிலாப்
பேராசைக்
கல்லாய்ச் சமைந்த
கஞ்சனின்
உருட்டு விழியும்
மருட்டிடும்
பார்வையும்,
கடுந்தேவைப்
பாட்டின்
ஓயா ஓலம்.
உளமதை
உலுக்கிடும்
புலம்பல்,
களைதனை
இழந்த
குற்ற நெஞ்சின்
வெளியேறிய
வதனம்,
பொய்தனை யுரைத்துக்
கறைமிகப்
படிந்து
கன்றிய உதடுகள்,
இகழ்ச்சிக்
கொடுமையில்
இன்பங்
கண்டிடும்
குரூரக்
கண்கள்
இவையாவையும்
இல்லாதொழிந்த
ஊரில், உலகில்—
நோயும் நொடியும்
பற்றிடா
உள்ளமும் உடலும்
உருவும் திருவும்
இரண்டறக் கலந்த
இல்லற வாழ்வின்
வடிவும் வழக்கும்
மக்கள் தம் வாழ்வினி
மெத்தவும் பொருந்தி
மாந்தர் தம்
வாழ்நாள் நீண்டிடும்
அச்சம் அகன்றிடும்
களிப்பு ஊறிடும்
அன்பு செழித்திடும்
ஊரில், உலகில்
என்பது உறுதி!
மனிதனின் மாண்பும்
மீண்டிடும்
ஊரில், உலகில்!



Regd S. No. 46/68 R. C. No. 17425

# ஈரோடு தாலூகா

# பேக்ரி ஓனர்ஸ் யூனியன்

1, முத்துவேலப்ப கவுண்டர் வீதி,
கைக்கோளன் தோட்டம்,
**ஈரோடு-1.**

மறைந்த தமிழக முதல்வர் மாண்புமிகு,
**பேரறிஞர் அண்ணாவின் 65-ம் ஆண்டு பிறந்தநாள்**
விழாவிற்கு எங்களது உளங்கனிந்த
நல்வாழ்த்துக்கள்.

K V. பழனியப்பன், தலைவர்.

K R சுப்பிரமணியம், செயலாளர்.

(சங்க நிர்வாகக் குழு மற்றும் சங்க உறுப்பினர்கள்)



## தமிழக அரசிற்குப் பாராட்டு

பலமுனை விற்பனை வரியை ஒருமுனை விற்பனை வரியாக மாற்றுங்கள் என வியாபாரிகள் விடுத்த வேண்டுகோளை ஏற்று ஒரு நபர் கமிஷன் அமைத்துள்ள தமிழக அரசிற்கு எங்கள் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

விலைவாசி ஏற்றத்தைத் தடுக்க உணவுப் பண்டங்களுக்கு வரி விலக்களித்து அதன் மூலம் விலைவாசி குறைய ஏற்பாடு செய்துள்ள தமிழக அரசிற்கு அறிஞர் **அண்ணா** அவர்களின் பிறந்த நாளில் எங்கள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# தானிய வியாபாரிகள் சங்கம்

**ஈரோடு.**

S. K. நடராச முதலியார், தலைவர்.

S. அங்கப்பன், செயலாளர்.